(ஆ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை' என்க. ('இல்லை').

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், 1993-94 அளித்தல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவைமுன் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 1993-94."

10. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 29 ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் 1-30 மணி அளவிலே முடிய வேண்டும் என்று விதி 29 இருந்தாலும், அதைத் தளர்த்தி, 2 மணி வரையிலும் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்." எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒரு மனதாகநிறைவேறியது மாண்புமிகு நிதி அமைச்சர்

11. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94 மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,